RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1992

# தெருக்கூத்து ஒப்பாரி பாடல்களில் பெண்களின் புலப்பாடு கருத்தமைப்பு

**மா. சங்கர் [அ, *], த. அண்ணாதுரை [அ]**

[அ] தமிழ்த்துறை, நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638052, தமிழ்நாடு, இந்தியா

# Women's View in Street and Lamenting Songs

**M. Sankar [a, *], T. Annadurai [a]**

[a] Department of Tamil, Nandha Arts & Science College, Erode–638052, Tamil Nadu, India

* Corresponding Author: tamilsankarm@gmail.com

Received: 30-08-2022
Revised: 23-10-2022
Accepted: 01-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Lamenting songs are one of the genres in Tamil literature. Music is intertwined in the life of the village people. Lamennting songs are sung to express the feeling of sorrow that arises in one's heart when a mother, father, husband, child, sibling or relative dies. People who do not know about the history of the dead people they can learn about the dead person's history through those songs. A musical instrument known as Roar is played in death house. The sound of roar announces the death news in society. The same custom is seen in the streets. The street songs are intertwined with the roar music. This article brings out the hidden lamenting songs of street artists. In addition, we see that the relationship between the artists and the context of the story is revealed through comparison. Also, dictionary description of lamenting, lamenting in literature, structure of street songs is described in this article.

**Keywords:** Tamil literature, Relationship, Artists, Lamennting songs

## முன்னுரை

நாட்டுப்புறவியல் பாடல்களில் அவல உணர்ச்சியை மிகுதியாக கொண்டிருக்கும் பிரிவு ஒப்பாரி பாடல்கள் ஆகும். மனிதன் தனித்து வாழ விரும்பாதவன். மனிதரோடு கூடி வாழும் இயல்பினன். அதனால் அவன் தன் உறவினர்களுடன் பல்வேறு தரப்பட்ட பாசப் பிணைப்புக்களால் கட்டுண்டு வாழ்கின்றான். அவ்வாறு வாழும் போது அந்தக் கட்டமைப்பில் யாராவது ஒருவர் இறக்கும் பொழுது தம் கடந்த காலங்களில் தங்களோடு பகிர்ந்துக் கொண்ட விசயங்களை நினைவுக் கூர்ந்து பேசுவதும், அவ்வாறு பேசாமல் எளிதில் உணர்ச்சி வசப்பட்டு சொல்லி அழுவதும் ஒப்பாரி எனலாம். தெருக்கூத்திலும் ஒப்பாரி பாடல்களின் தாக்கம் அதிகமாக இடம் பெற்றுள்ளது (Sanmugasundaram, 2012).

## ஆய்வு முறை

தெருக்கூத்து கலைஞர்களிடம் புதைந்து கிடக்கும் ஒப்பாரி பாடல்களை வெளிக்கொணரும் விதமாக இவ்வாய்வு நிகழ்த்தப்படுகிறது. அதோடு அந்த கலைஞர்களிடம் உள்ள உறவு பிணைப்பும், கதை சூழலும் ஒப்பாரியின் வாயிலாக வெளிப்பட்டு நிற்பதைக் காண்கிறோம். மேலும் ஒப்பாரிப் பற்றிய அகராதி விளக்கம், இலக்கியங்களில் ஒப்பாரி, தெருக்கூத்து ஒப்பாரி பாடல்களின் அமைப்பு முறைகள் ஆகியன இவ்வாய்வில் எடுத்தாளப்பட்டுள்ளன.

## தெருக்கூத்து

தமிழினம் பிறப்பு முதல் இறப்பு வரை இசையோடு ஒன்றிய வாழ்க்கை கொண்டிருந்த பெருமைக்குரியதாகும். பண்டைத் தமிழ் நூல்களான அகத்தியம் செயிற்றியம் சயந்தம் குணநூல் போன்ற நூல்களில் தமிழ்க் கூத்து வகைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இசையும் கூத்தும் பிரிக்க இயலாத வகையில் பின்னிப் பிணைந்தே மக்களை மகிழ்வித்து வருவதாகக் கூறலாம். இசை,ஆட்டம், தாளம் அகிய மூன்றும் சேர்ந்ததன் தொகுப்பே "கூத்து" எனலாம்.

## கூத்துக்கலை பற்றிய ஆதாரங்கள்

கல்வெட்டு ஆய்வாளரான என். ராமசந்திரன் 1962 ல் அங்கல்லூர் (நல்லமலை) என்ற இடத்தில் கண்டறிந்த கல்வெட்டானது தொல் தமிழரின் நடனம் பற்றி விளக்குகிறது. இதன் காலம் கி.பி 3 ம் நூற்றாண்டு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் நடனக் குறியீடுகள் "சமணத்துறவி" ஒருவரால் பொறிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. கி.பி 7ம் நூற்றாண்டில் வரையப்பெற்ற "சித்தன்னா வாசல் ஓவியங்கள்" வாயிலாக பல்லவர் நடனக்கலையின் சிறப்பம் சத்தினை உணரலாம். இங்குள்ள பரத நாட்டிய அபிநயங்களில் "கிஸ்த அபிநயச் சிற்பம்" குறிப்பிடத்தக்கதாகும். இராஜ ராஜசோழன் 108 பரதநாட்டிய கரணங்களை பிரகதீஸ்வரர் ஆலத்தின் உச்சியில் வரையுமாறு செய்ததில் இருந்து அம் மன்னனுக்கு நாட்டியத்தின் மீது கொண்ட ஈடுபாடு விளங்கும்.

## கோட்பாட்டு அணுகு முறைகள்

ஒப்பாரி பாடல்களை அணுகுவதற்கு இரண்டு கோட்பாடுகள் பயன்படுத்தப்படுகிறது. அவை 1. வாய்மொழி வாய்ப்பாட்டு கோட்பாடு, 2. சூழல் கோட்பாடு.

### வாய்மொழி வாய்ப்பாட்டு கோட்பாடு

நாட்டுப்புறவியல் கோட்பாடுகளில் அதிகமாக பனுவல் என்ற முறையினை வைத்து ஆய்வு செய்யப்பட்டன. பாடல் பாடுபவருக்கோ முக்கியத்தவம் தரப்படுவது இல்லை. முதன் முதலில் வாய்மொழி வாய்ப்பாட்டு கோட்பாட்டின் வழி பாடகருக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. பாடகரின் மனதில் பாடல் உருவாகும் முறைகளையும், அவர் பாடல் பாட பயன்படுத்தப்படும் உத்திகளையும் மனதில் கொண்டு மனப்பாடம் செய்வதன் மூலம் பாடுகிறாரா அல்லது பாடும் போது தாமாகவே உருவாக்குகின்றாரா ? என்று அறிவது கோட்பாடு ஆகும். ஒப்பாரி பாடல்களில் இந்த கோட்பாடு மிக முக்கிய இடத்தினை பெறுகிறது.

### சூழல் கோட்பாடு

சூழல் கோட்பாடு என்பது நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் அறிஞர்கள் வழக்காறுகளின் சுவை, பண்பு மற்றும் அதைச் சொல்லும் முறையிலேயே அமைந்துள்ளன என்பதை உணர வேண்டும். பாடல் பாடும் நிகழ்வை பாடுகின்ற சூழல், பாடும் நேரம், பருவகால நிலை முதலானவற்றோடு இணைத்துப் பார்க்க வேண்டும். அந்தந்த மண்ணில் தான் பாடுகள் வாழ்கின்றன. அவை எழுதப்படும் தாள்களில் வாழ்வதில்லை. ஒப்பாரி பாடல்களை பெறுத்தவரை சூழல் என்பது முக்கிய இடத்தை பெறுகிறது.

## அறிஞர்களின் கருத்துக்கள்

பவனாந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ் சொல் அகராதி "அழுகையில் ஒப்பனையிடுகை" என்றும் பொருள் தருகிறது. தமிழில் ஒப்பாரியை பிலாக்கணம், பிணக்கணம், கையறு நிலை, புலம்பல்,

இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு என்று கூறியுள்ளார் (Sanmugasundaram, 2012). நாட்டுப்புற மக்களின் அழுகைப் பாடலை ஒப்பாரி என அழைக்கின்றனர்.

## ஒப்பாரி சொல் விளக்கம்

பழமையான வாய்மொழி வழக்காறுகளுள் ஒன்று ஒப்பாரி. இறந்தவரை நினைத்து அவர் ஒப்பாரி எனப் பிரித்து மேல் பாடப்படும் பாடலை ஒப்பாரி என்பர். இதனை ஒப்பு ஆரி அழுகைப்பாட்டு எனப் பொருள் தருகிறது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி. ஒப்பாரி என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில் "அரன்ன ஒப்பாரியாங் கண்டதில்" என்று வருகிறது. இதில் ஒப்பாரி என்பது ஒத்தவர் என்ற பொருளால் பயன்படுத்தப்படுகிறது.

## மாரடிப்பாட்டு

ஒப்பாரி வைத்து மார்பில் அடித்து அழுவதை மாரடிப்பாட்டு அஎன்று கூறுவர். இழவு வீட்டின் முன் பெண்கள், ஆண்கள் வட்டமாக நின்று தன் இரு கைகளையும் மார்பில் அல்லது தோள் பட்டையில் வைத்து பின்னர் கிழே கைகளை கொண்டு சென்று கும்மி அடிப்பது போன்று அடித்து சூழன்று ஆடி வருவர். நடுவில் ஒரு பெண் ஒப்பாரி பாடல் பாடிக்கொண்டு இருப்பார் (Sanmugasundaram, 2012).

## ஒப்பாரி பெண்கள் பாடுவதன் பின்புலம்

பெண் இளம் வயதில் பெற்றோர்க்கும், பருவ மடைந்தவுடன் கணவனுக்கும், வயதான பிறகு மகன், மகளுக்கும் அடிமைப்பட்டவள் என்ற மனுதர்மக் கோட்பாடுகள் முற்றிலும் மறைந்து விடவில்லை. இச்சூழலில் பெண்ணின் வாழ்வியலிலும், அவள் வெளிப்படுத்தும் கலாச்சாரத்திலும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன (Sanmugasundaram, 2012).

## உறவு முறை புலப்பாடு

தந்தையை இழந்த மகள் பாடும் ஒப்பாரி, தாயை இழந்த மகள் பாடும் ஒப்பாரி, கணவனை இழந்த மனைவி பாடும் ஒப்பாரி, அண்ணன், தம்பியை இழந்த தங்கை பாடும் ஒப்பாரி, குழந்தையை இழந்த தாய் பாடும் ஒப்பாரி, மாமியாரை இழந்த மருமகள் பாடும் ஒப்பாரி, பாட்டனை இழந்த பேத்தி பாடும் ஒப்பாரி. கூறப்பட்ட புலப்பாடுகளை வைத்து பெண்களின் புலம்பல்களை ஆராய முற்பட வேண்டும்.

### தந்தையை இழந்த மகள் பாடும் ஒப்பாரி

தந்தை தனக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசைகள் எல்லாம் தவறாமல் வந்து சேரும் என மணமான மகள் எதிர்பார்த்திருப்பது இன்றைய யதார்த்த வழக்கமாகும். ஆனால் இடையிலேயே தந்தை இறந்து விட்டார் எனில் மகளின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாய்ப் போய் விடுகிறது.

"சீமந்தம் செய்யும் போது என்ன பெத்த அப்பா

எனக்கு சீர் கொண்டு வாரனே !

என்ன பெத்த அப்பா

இன்னைக்கு சீரும் நடக்கல !

நீ பெத்த பெண்ண விட்டு சிவலோகம் சேர்ந்தாயோ"!

என்ற வரிகள் விளக்குகின்றன (Sanmugasundaram, 2012).

## தாயை இழந்த மகள் பாடும் ஒப்பாரி

ஒரு பெண் தன் உளவியலின் உள்ளார்ந்த செய்திகளை தன் தாயிடமே விவரித்துக் கூற இயலும். முன உளைச்சல்களையும், தேவைகளையும் தாயிடமே கூறி ஒரு பெண் விடை காண முடியும். திருமணத்திற்குப் பிறகும் கூட தாயின் முக்கியத்துவம் மகளுக்கு குறைந்து போய்விடுவதில்லை. எனவே தாயின் மரணமும் மகளை ஆழ்ந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கும். இதனை,

"என்ன தவம் இருந்து

பெத்து எடுத்துவளே அம்மா

இப்ப தனி மரமா வீட்டுடையோ

மூக்குனேயோ மூச்சி முட்ட

கத்துனயோ காது கிழிய" (Sakthivel, 2012)

## கணவனை இழந்த மனைவி பாடும் ஒப்பாரி

கணவனின் இழப்பு என்பது பெண்ணுக்குப் பேரிழப்பாக மாறிவிடுகிறது. 'கணவனை. இழந்தோர்க்குக் காட்டுவது இல்' -சிலம்பு.

"அம்மா நான் பத்து சுத்து பட்டு உடுத்தி

நான் பத்து சுத்து பட்டு உடுத்தி

நான் பாதையிலோ போனலும்

நான் பாதையிலோ போனலும்

என்ன பாத்த சாகுணம் என்ப" (Sanmugasundaram, 2012)

## குழந்தையை இழந்த தாய் பாடும் ஒப்பாரி

குழந்தையைத் தொட்டிலிட்டு தாலாட்டியும், நோய் நொடியின்றி வளர்த்தும். அன்பு காட்டிய தாயை விட்டுப் பிள்ளை இறந்தால் உண்டாகும் தாயின் பாசம். குழந்தையை இழந்த தாய் புலம்புகிறாள்.

"பட்டு மரம் பொருள் உடுத்தி

வளகாப்பு திலகமிட்டு

கண்ணே நீ ஜலித்த பத்தாம் மாதம்

அய்யே இந்த சண்டாலி பெத்தேனாடா"

இந்த வரிகள் உணர்த்துகிறது (Sakthivel, 2012).

## முடிவுரை

மனிதர்கள் இவ்வுலகில் தோன்றினால் அவன் இறப்பது என்பது யாராலும் மாற்ற முடியாத ஒன்று. அத்தகைய இறப்பு என்ற துன்பமான நிகழ்வினை படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்கள் ஓசை நயத்துடன் பாடித் தன் துயரினைப் போக்கிக் கொள்ள காரணமாக இருந்தப் பாடல்களே ஒப்பாரி பாடல்கள். பெண்கள் தன் பாச உணர்வினை வெளிப்படுத்தும் களமாக அமைகிறது. தெருக்கூத்திலும் தந்தை, தாய், மகன் என பல உறவு முறைகளை கொண்ட பாடல்களை அடிப்படையாக கொண்டு இவ்வியலில் ஆராய்ந்துக் கூறப்படுகின்றது.

## References

Kathirvelpillai, (2012) Tamil Mozhi Agrathi, Madras University, Chennai, India.

Sakthivel, S. (2012) Nattupuraviyal aaivu, New Century Book House, Chennai, India.

Sanmugasundaram, (2012) Nattupuraviyal, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License